★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை : புரட்டாசி 31உ. செவ்வாய் (16—10—56) ★ ★ வெளியூர் : ஐப்பசி 1உ. புதன் (17—10—56) [இதழ் 109

உயர்தரக் கல்வி நிலையங்களுக்கு ஒலிப்பதிவு இயந்திரம்

ரெய்ப்பூர், அக். 15—

மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள உயர்தரக் கல்வி நிலையங்கள் இனி, ஒலிப்பதிவு இயந்திரங்கள் வைத்துக் கொள்ளும் வாய்ப்புப் பெறும்.

வகுப்பறைகளில் பிரபல ஆசிரியர்கள் கற்றுத்தரும் பாடங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, பின்பு மாணவர்களுக்கு ஒலிபரப்பப் படும் என்றும், இது, மாணவர்கள் பாடங்களைத் தெளிவாகப் பயிலப் பயன்படும் என்றும் மாநிலக் கல்வி அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

சங்கரலிங்கனுருக்குக் காங்கிரசார் துரோகம்!

சேலம் காங்கிரசார் கலக்கம்

பொதுமக்கள் காட்டிவரும் பேரார்வம்

திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, சேலம் நகர்களில் தேர்தல் ஆய்வுக் குழுவினர்

தி. மு. கழகம் பொதுத் தேர்தலில் கலந்து கொள்வதுபற்றி தமிழ்நாட்டுச் சூழ்நிலைகளை அறிந்துகொள்வதற்காகக் கழகத் தேர்தல் ஆய்வுக் குழுவினர் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டிருப்பது தெரிந்ததே.

கடந்த 12-ந் தேதியன்று சென்னையிலிருந்து புறப்பட்ட அவர்களின் அன்றையப் பணிகள் பற்றிய விபரங்கள் ஏற்கனவே தரப்பட்டுள்ளன.

இன்று, அவர்களது 13-ந் தேதிய பணிகளின் விபரங்கள் இங்கு தரப்படுகின்றன :—

திருப்பத்தூர் :

தேர்தல் ஆய்வுக் குழுவினரான இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோர் வ. ஆ. மாவட்டச் செயலாளர் முல்லை-சத்தி அவர்களுடன் 13—10—56 காலை 10 மணிக்குத் திருப்பத்தூர் வந்து சேர்ந்தனர். தேர்தல் ஆய்வுக் குழுவினரின் பணிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சின்னக்கடைத் தெரு 58 எண்ணுள்ள கட்டிடத்தில், நகரச் செயலாளர் சி. எஸ். பாலு அவர்களும், மற்றத் தோழர்களும் ஆய்வுக்குழுவினரை வரவேற்றனர். ஏராளமான பொதுமக்களும், கழகப் பிரதிநிதிகளும் கட்டிடத்திற்கு உள்ளும் வெளியேயும் கூடியிருந்தனர்.

பின்னர் பல்வேறு தொகுதிகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள், கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரிடையே பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ஆய்வுக் குழுவின் வேலைத் திட்டங்களையும், அதற்கேற்ப பிரதிநிதிகள் தரவேண்டிய விவரங்களைக் குறித்தும், தேர்தல் நிதியைத் திரட்டும் பணியில் தோழர்கள் காட்டவேண்டிய அக்கறையையும் குறிப்பிட்டுப் பேசினார்.

அடுத்தபடியாகப் பிரத்தியேக அறையில் தேர்தல் ஆய்வுக் குழுவினரான நெடுஞ்செழியன், சம்பத், நடராசன், மதியழகன் ஆகிய நால்வரும் திருப்பத்தூர், கொரட்டி, வாணியம்பாடி தொகுதிகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளைத் தனித்தனியாக அழைத்துத் தேர்தல் சூழ்நிலையைப் பற்றிய விவரங்களையும் அறிந்தனர்.

தோழர் ஜி. சாமி(நாயுடு) பி.ஏ., பி.எல்., உள்ளிட்ட 75 பேர்கள் ஆய்வுக் குழுவின் முன் தங்களின் எண்ணங்களைத் தெரிவித்தனர். பிற்பகல் 2-30 மணிக்கு வேலைகள் முடிந்தன.

பிற்பகல் 4 மணிக்கு ஆய்வுக்குழுவினர் திருப்பத்தூரிலிருந்து கிருஷ்ணகிரிக்குப் புறப்பட்டனர். மாவட்டச் செயலாளர் முல்லை-சத்தி, நகரச் செயலாளர் பாலு, மற்றும் கழகத் தோழர்கள் உடனிருந்து வழி அனுப்பினர். அனைவருக்கும் ஆய்வுக் குழுவின் சார்பில் பொதுச்செயலாளர் நன்றி தெரிவித்தார்.

காங்கிரசார் உள்ளிட்ட மாற்றுக் கட்சித் தோழர்களும் பொதுமக்களும் ஆய்வுக்குழுவினர் விசாரணையின்போது கட்டிடத்திற்கு வெளியே கூடியிருந்து விவரம் அறிய ஆவலுடனிருந்தனர்.

கிருஷ்ணகிரி :

13-10-56 பிற்பகல் 6 மணிக்கு தேர்தல் ஆய்வுக்குழுவினர் கிருஷ்ணகிரிக்கு வந்து சேர்ந்தனர். ஆய்வுக்குழுவின் பணிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கோவாப்ரேடிவ் காலனியிலுள்ள தோழர் டி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ. அவர்கள் பங்களாவில், சேலம் மாவட்டச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம், துணைச்செயலாளர் ப. இராமலிங்கம், பொருளாளர் பி. ஏ. குப்புசாமி, எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., பேபி கந்தசாமி எம். பி., டி. கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஏ., கிருஷ்ணகிரி நகர தி. மு. கழகச் செயலாளர் நாராயணன் ஆகியோர் ஆய்வுக் குழுவினரை வரவேற்றனர். சேலம் மாவட்டத்தில் பல தொகுதிகளிலிருந்து கழகப் பிரதிநிதிகளும், ஆதரவாளர்களும் தங்களின் எண்ணத்தைத் தெரிவிக்க ஏராளமாகக் கூடியிருந்தனர்.

நகரப் பிரமுகர்களும் வியாபாரிகள் சங்க நிர்வாகிகளும் வந்திருந்தனர்.

இரா. நெடுஞ்செழியன் அவர்கள் அனைவருக்கும் ஆய்வுக் குழுவின் வேலைத் திட்டங்களை எடுத்துக் கூறியதோடு அதற்குத் துணையாக வந்திருக்கும் பிரதிநிதிகள் தங்களின் எண்ணத்தை ஒளிவு மறைவின்றி அறிவிக்குமாறும், கழகத் தோழர்கள் தேர்தல் நிதியைத் திரட்டுவதில் உடனடியாக அக்கறை காட்டி அவ்வப்போது தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வருமாறும் கேட்டுக்கொண்டார்.

பின்னர் ஆய்வுக் குழுவினர் பிரத்தியேக அறையில் வீற்றிருந்து தொகுதிவாரியாகப் பிரதிநிதிகளிடம் தனித் தனியாக விவரம் அறிந்து பதிவு செய்து கொண்டனர்.

தோழர் டி. கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஏ., உள்ளிட்ட சில பிரமுகர்களும், நகர வியாபாரிகள் சங்க நிர்வாகிகளும் ஆய்வுக் குழுவினரிடம் தங்களின் எண்ணங்களை அறிவித்தனர். இரவு 9-30 மணிக்கு இங்கு ஆய்வுக் குழுவின் பணி முடிவுற்றது.

இரவு கிருஷ்ணகிரியில் ஓய்வு பெற்று 14-10-56 காலை சேலத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

சேலத்தில் :

சங்கரலிங்கம் மறைவுக்கு வீர வணக்கம்

14—10—56 காலை 10-30 மணிக்கு தேர்தல் ஆய்வுக் குழுவினர், சேலம் சித்தேசுவரா தியேட்டர் வந்து சேர்ந்தனர்.

மாவட்டச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம், நகரச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் ஆய்வுக் குழுவினரை வரவேற்றனர். தியேட்டரில் கழகப் பிரதிநிதிகளும் பொதுமக்களும் ஏராளமாகக் குழுமியிருந்தனர்.

'சென்னைமாநிலம்' என்பதை 'தமிழ்நாடு' எனப் பெயரிட வேண்டுமென்பதற்காகக் கடந்த இரண்டு திங்களாக விருதுநகரில் உண்ணுவிரதமிருந்த சங்கரலிங்கம் அவர்கள் உயிர்நீத்தார் என்ற செய்தி அவ்விடம் அறிவிக்கப்பட்டது.

பொதுச்செயலாளரும், ஆய்வுக் குழு உறுப்பினர்களான என். வி. நடராசன், ஈ.வெ.கி. சம்பத், கே. ஏ. மதியழகன் ஆகியோர் செய்தியைக் கேட்டு மிகவும் வருந்தினர். ஆய்வுக் குழுவின் பணி துவக்கப்படுவதற்கு முன்னதாக, மறைந்த மாவீரர் சங்கரலிங்கம் அவர்களுக்கு அனுதாபமும் வீர வணக்கமும் செலுத்தப்பட்டது.

பொதுச்செயலாளர் அவர்கள் சென்னை அரசியலாரின் அநீதியையும், சங்கரலிங்கம் அவர்களின் தூய்மையான தொண்டினையும், அண்மையில் விருதுநகரில் அண்ணு அவர்களும், தோழர் என். வி. நடராசன் அவர்களும் உண்ணுவிரதமிருந்துவந்த சங்கரலிங்கனுரைச் சந்தித்த விவரத்தையும் விவரித்துக் கூறி, திராவிட முன்னேற்றக் கழகச் சார்பிலும், ஆய்வுக் குழுவின் சார்பிலும் மறைந்த மாவீரர் சங்கரலிங்கம் அவர்களுக்கு வீர வணக்கமும், அவரின் குடும்பத்தாருக்கு அனுதாபமும் தெரிவித்தார்.

இரண்டு நிமிடநேரம் அனைவரும் எழுந்துநின்று மறைந்த மாவீரர் சங்கரலிங்கம் அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்தினர்.

பின்னர் தேர்தல் ஆய்வுக் குழுவினர் பிரத்தியேக இடத்தில் தங்கள் அலுவல்களைத் துவங்கினர். சேலம் மாவட்டத்தின் மற்றத் தொகுதிகளிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளும், ஆதரவாளர்களும் தங்களின் எண்ணங்களை ஆய்வுக் குழுவினரிடம் தெரிவித்தனர்; மேலும் கேள்விகளுக்குத் தக்க விளக்கமும் தந்தனர். தோழர்கள் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., பேபிகந்தசாமி, எம். பி., மாவட்டச் செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம் ஆகியோரும் ஆய்வுக் குழுவினரிடம் தங்களின் கருத்துக்களை அறிவித்தனர்; அனைத்தும் தனித் தனியாகப் பதிவு செய்யப்பட்டன.

இத்துடன் சேலம் மாவட்டத்தில் ஆய்வுக்குழு தனது பணியினை முடித்துக்கொண்டு மாலை 6-மணிக்கு ஈரோட்டுக்குப் புறப்பட்டது.

சேலம் மாவட்டச்செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம், மாவட்ட நிர்வாகிகள், சேலம் நகரச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் ஆகியோரும், ஏராளமான பொதுமக்களும் ஆய்வுக்குழுவினரை வழி அனுப்பிவைத்தனர்.

ஆய்வுக்குழு சேலம் நகர் வந்து சேர்ந்தது முதல் மாலைவரை காங்கிரஸ் வட்டாரத்தில் பெரும் பரபரப்பையும், பொதுமக்களிடையே பேரார்வத்தையும் உண்டாக்கியிருக்கிறது.

நகரசபைக் கூட்டத்தை ஒத்திவைக்க மறுத்தனராம்

முத்துவின் முயற்சி, மக்களின் ஆதரவால் வெற்றிபெற்றது

நகரில் பொது வேலைநிறுத்தம் ; தி.மு.க.-வினர் முன்னின்று நடத்திய மாபெரும் ஊர்வலம்

மதுரை, அக். 16—

தமிழ் மக்களது கோரிக்கைகள் சிலவற்றிற்காக உண்ணுவிரதம் இருந்து உயிர்நீத்த விருதுநகர் காந்தீயவாதியான சங்கரலிங்கம் (நாடார்) அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கக்கூட மதுரை காங்கிரசார் மறுத்துவிட்ட விநோதம்பற்றி செய்தி கிடைத்திருக்கிறது.

நகரசபையில் ...!

மதுரை நகரசபையின் அவசரக் கூட்டம் ஒன்று 15-ந் தேதி அன்று நடைபெற்றது.

அப்போது, 'சங்கரலிங்கத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும்' என்று நகரசபை உறுப்பினர் தோழர் எஸ். முத்து (தி. மு. க.) ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

இதனை ஏற்க மறுத்துவிட்டாராம் நகரசபைத் தலைவர்; சில காங்கிரசார் இத் தீர்மானத்தைக் கண்டித்தும் பேசினார்களாம்.

பிறகு, நகரசபைத் தலைவரே சங்கரலிங்கத்திற்கு அனுதாபம் தெரிவிக்க மட்டும் ஒரு தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்.

இதற்கு ஒரு திருத்தத்தைப் பிரரேபித்து, தோழர் எஸ். முத்து அவர்கள், 'சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும்' என்று கோரியிருக்கிறார்.

இந்தத் திருத்தத்தை ஏற்க மறுத்த காங்கிரசார், 90 நிமிட நேரம்வரை வம்பு பேசிக்கொண்டிருந்தனராம்.

பின்னர் ஏராளமான பொதுமக்கள், ஊர்வலத்தை முடித்துக்கொண்டு, நகரசபைக் கட்டிட வாயிலில் கூடியிருக்கின்றனர். அவர்கள் சபை நடவடிக்கைகளை நடத்தவிடமாட்டார்கள் என்று எச்சரிக்கப்பட்ட பிறகே, தலைவர் சபை ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தாராம்.

அர்த்தால்

சங்கரலிங்கனுர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நகரில் இன்று பூரண அர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது; முக்கிய ஆலைகள், கடைகள் எல்லாம் மூடப்பட்டன.

இந்த அர்த்தால் ஏற்பாடுகளை திராவிட முன்னேற்றக் கழகம், பிரஜா-சோஷலிஸ்டு, சோஷலிஸ்டு கட்சிகள், தமிழரசுக் கழகம் ஆகியவை கூட்டாக மேற்கொண்டிருக்கின்றன.

மாபெரும் ஊர்வலம்

மேற்கண்ட கட்சிகள் அனைத்தும் சேர்ந்து, நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஓர் மாபெரும் ஊர்வலம் நடத்தியிருக்கின்றனர். ஊர்வலத்தில், அனைவரும் கருப்புத் துணிச் சின்னம் அணிந்துகொண்டு வந்திருக்கின்றனர்.

இந்தப் பெரும் ஊர்வலத்தை தி. மு. கழகத் தோழர்களான எஸ். முத்து, அரசக்கண், இரத்தினம், நெடுமாறன், சமதர்மம், பகவதி, குலாம், செல்வராஜ், முதலியோர் முன்னின்று நடத்தியிருக்கின்றனர்.

பொதுக்கூட்டம்

ஊர்வலம் திலகர் திடலை அடைந்ததும் அங்கு தோழர் பாலசுப்ரமணியன் (பி. சோ.) தலைமையில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் தோழர்கள் கே. எஸ். சந்தானம் (தி. மு. க.), கண்ணையா (தமிழரசு), சௌந்திரம் (சோஷ.) ஆகியோர் சங்கரலிங்கம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் அவர் எந்தக் கோரிக்கைகளுக்காக உண்ணுவிரதமிருந்தாரோ அவற்றை விளக்கியும் பேசியிருக்கிறார்கள்.

இந்த ஊர்வலத்திலும், பொதுக் கூட்டத்திலும், கடையடைப்பு நடவடிக்கைகளிலும் கம்யூனிஸ்டுகள் கலந்து கொள்ளவில்லை என்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

நகரசபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டபின் மீண்டும், மாலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நகரசபை உறுப்பினர்களான எஸ். முத்து, வி. கே. தாஸ் ஆகியோர் பேசியிருக்கின்றனர்.

நம் நாடு
ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 16—10—'56 செவ்வாய்

இடுகாட்டிலும் இழிவு!

ஒருவன் வாழ்ந்துகொண்டிருந்தபோது ஆகாதவன் எனக் கருதப்பட்டாலும், அவன் இறந்துபட்டால், அவனை ஆகாதவன் எனக் கருதியவரும், தனக்கும் அவனுக்குமிருந்த வேற்றுமைகளையும் மறந்து இறந்தவனுக்குப் புஷ்மாலை சூட்டுவது உலக இயல்பு. ஆனால் இந்து மதம் இந்த இயல்பினைக்கூட அங்கீகரிக்கவில்லை என்பதை, தாழ்த்தப்பட்டவர்கள் செத்துப் போனபின்னும் இடுகாட்டில்கூடத் தாழ்த்தப்படாத வகுப்பினருடன் ஒன்றிவிடக்கூடாது என விதித்திருக்கும் இழிவான கொடுமையிலிருந்து நாம் காணலாம்.

ஆப்பிரிக்கக் கண்டத்து மக்கள் அனுபவிக்கும் சமூகக் கொடுமைகளைவிடக் கொடிய கொடுமைகளுக்கு, இந்த நாட்டுத் தாழ்த்தப்பட்டவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்துதான், காந்தியார், மதக் கேடுகளுள் ஒன்ருன தீண்டாமை அடியோடு ஒழிக்கப்பட வேண்டுமென வாதாடிவந்தார்.

இப்போது நாடாளும் நாயகர்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சில விசேடச் சலுகைகளையளிக்கவும், தீண்டாமை அனுபவிப்பது குற்றம் என்றும் சில சட்டங்களை இயற்றிவிட்டதுடன், தீண்டாமை ஒழிப்பிற்கான அத்தனை வேலைகளும் முடிந்துவிட்டதாகக் கருதிக்கொண்டிருக்கின்றனர்.

சட்டங்கள் இயற்றப்பட்டிருப்பது ஒருபுறமிருக்க, அந்தச் சட்டங்கள் சரிவர அமுலாவதில்லை என்பதுவேறு ஒரு பிரச்சினையாகிவிட்டிருப்பதைத் தான் அண்மையில், 'தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்கள் எந்த ஒரு பொது இடுகாட்டினையும் உபயோகித்துக் கொள்ளலாம்' என்று சென்னை மந்திரி சபையினர் மேற்கொண்டுள்ள முடிவு எடுத்துக்காட்டுகிறது.

சர்க்கார் இயற்றியுள்ள சட்டங்கள் தீண்டாமையை ஒழிப்பதற்குப் போதுமான ஆற்றல் படைத்திருக்கவில்லை என்பதும் கண்கூடு.

தீண்டாமை, இன்னும் இந்தியாவில், குறிப்பாகத் தென்னுட்டில் சட்டங்கள் இயற்றப்படுவதற்கு முன்னைப் போலவே பரவலாக நீடித்துக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம்.

தஞ்சையில் வரகூர் கோவிலில் பார்ப்பனர் அல்லாத எவரும் நுழையக்கூடாது என்று கூறுபவர்கள் இருக்கிறார்கள்.

தீண்டாமை ஒழிப்புக்காகச் சர்க்கார் விளம்பரச் சுவரொட்டி தயாரித்தால், அதை எதிர்க்கிற பத்திரிகைகளும் 'பெரிய மனிதர்'களும், 'தலைக் குலத்'தவரும் இருக்கிறார்கள் இங்கு!

'தீண்டாமையைக் கடைப்பிடிக்கக் கூறும் சாதித் திமிர், இன்னும் இந்தியாவிலிருந்து ஒழியவில்லை. ஆகவே, இந்து மதத்திற்கு முழுக்குப் போடுகிறோம்; புத்த மதத்தைத் தழுவிக்கொள்கிறோம்' என்று கூறியிருக்கிறார், டாக்டர் அம்பேத்கார்.

தீண்டாமை ஒழிப்புக்காகச் சட்டங்களும், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்காகத் திட்டங்களும் தீட்டுகின்றனர், சர்க்கார்.

இந்து மத சாதிக் கொடுமை தாளாது, இரண்டு இலட்சம் பேர், 'புத்தம் சரணம் கச்சாமி' என்று ஒலிக்கின்றனர்; கோவிலுள் நுழைய நீதிமன்றம் நாடுகின்றனர்; தீண்டாமை ஒழிப்புக்காகச் சர்க்கார் தயாரித்து வெளியிட்டு, பின் திரும்பப் பெற்றுக்கொண்ட சுவரொட்டிகளைப் போன்று வேறு தயாரித்துப் பிரச்சாரம் செய்கிறது நமது தி. மு. கழகம்.

நிலைமை இப்படி இருக்கிறதே ஏன்? என்று மடிவது இந்த அவல நிலை?

இந்து மதம் 'வர்ணுசிரம தர்மத்'தை அடிப்படையாகக் கொண்டது. அந்தத் 'தர்மம்' பெற்றெடுத்து வளர்த்து, அழியாது பாதுகாத்துவரும் பிள்ளைகள்தான், சாதிக் கொடுமையும், தீண்டாமையும், அவைபோன்ற பிறவும்.

தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு இவற்றிற்காகச் சட்டங்கள் மட்டும் போதுமானவையல்ல. ஆனால், சட்டங்கள் தேவையே இல்லை என்று நாம் கூறுவதாக, வேண்டுமென்றே தவறு செய்ய விரும்புபவர்கள்தான் எண்ணுவர்.

மக்களுடைய உள்ளப்போக்கில்—மனப்பாங்கில் தீவிரமான —புரட்சிகரமானதோர் திருப்பம்—மாற்றம்—மலர்ச்சி ஏற்பட்டாக வேண்டும். புழுக்களையும், கொசுக்களையும் ஒழிக்க மருந்து தூவினால் போதாது; இவற்றை உற்பத்தி செய்யும் சாக்கடைகள் தூர்க்கப்பட வேண்டும். தீண்டாமை, சாதிக் கொடுமை அகல சட்டங்கள் மட்டும் போதாது; இவற்றைப் பேணி வளர்க்கும் இந்துமத நம்பிக்கை, வேரோடு வெட்டிச் சாய்க்கப்பட வேண்டும்.

'ஒன்றே குலம்' என்ற உயரிய எண்ணம், முதலில் உயர்ந்தோர் எனப்படுவோரிடை வேர்விட்டு முளைத்து, வலுவோடு வளர்ந்தாகவேண்டும். அவர்கள் முன்மாதிரியாக நடந்துகொள்வதைப் பொறுத்தும்தான் எல்லாமக்களிடையேயும் தேவையான மனமாற்றம் ஏற்படுவது இருக்கிறது என்பதை, இந்து மதம் என்ற ஒன்று இருபதாம் நூற்றுண்டின் இறுதி வரையேனும் இருக்க வேண்டும் என்று விரும்புவோர் எண்ணிப்பார்க்க வேண்டும். அப்போதுதான், 'இடுகாடு, இனி எல்லோருக்கும் பொது' என்று சட்டம் இயற்றுகிற நிலை அகலும்.

'யுத்தத்தில் ஈடுபட சீனுவுக்கு நேரமில்லை'!

"நிர்மாண வேலைகள் ஏராளமாக இருக்கின்றன; எனவே, செஞ்சீனுவுக்கு யுத்தத்தில் ஈடுபட நேரமில்லை,"

என்று, பிரிட்டிஷ் வர்த்தக அபிவிருத்திக் கழகத் தலைவரான பாயிட் பிரபு கூறியதாக பீகிங் வானொலி அறிவித்திருக்கிறதாம்.

டாக்டர் அம்பேத்கார் தீவிர அரசியலில் ஈடுபடுவார்

தேர்தலுக்காகப் புதிய கட்சி துவங்குவார்

புத்த மதத்தைத் தழுவிய பின்பும் தாம், தொடர்ந்து தீவிர அரசியலில் ஈடுபடப் போவதாக டாக்டர் அம்பேத்கார் தெரிவித்திருக்கிறார்.

தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தில் தான் தொடர்ந்து உறுப்பினராயிராவிட்டாலும், வரப்போகும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதாயும் அவர் தெரிவித்திருக்கிறார்.

புதிய கட்சி

வரப்போகும் பொதுத் தேர்தலுக்குமுன், 'தேசியக் குடியரசுக் கட்சி' என்ற பெயரில் ஒரு புதிய கட்சி துவங்கப் போவதாயும், அரசியல் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள சமத்துவம் — சுதந்திரம்—சகோதரத்துவம் என்ற கொள்கைகளின் அடிப்படையில் அக்கட்சி இயங்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

புதிய கட்சியில் எவர் வேண்டுமானாலும் உறுப்பினராகலாம் என்றும், தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தவர்கூட உறுப்பினராகலாம் என்றும் அம்பேத்கார் விளக்கம் தந்திருக்கிறார்.

குறுக்கு வழியல்ல!

"அரசியல், குறுக்கு வழியல்ல; அதிகாரத்தைக் கைப்பற்ற சிரமப்பட்டு கஷ்டப்பட்டாக வேண்டும்" என்றும் அவர் கூறியுள்ளார்.

சலுகைகள்

"புத்த மதத்தைத் தழுவிய பின்னரும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ள சலுகைகளைப் பெறுவரா?"

என்று, கேட்கப்பட்டபோது, டாக்டர் அம்பேத்கார் குறிப்பிட்டதாவது:—

"இந்தியப் பிரஜைகள் என்ற அளவில் தரப்படும் சலுகைகள் தொடர்ந்து தரப்படும்; எப்போதும் நாங்கள் தனிப்பட்ட பாதுகாப்புக்காளாக்கப்பட்டிருக்க வேண்டுமென்கிறீர்களா? நான் ஒரு அரசியல் உரிமை பற்றி—ஐந்தாண்டுக்கொருமுறை போய் வாக்களிக்கும் உரிமை பற்றிக் கவலைப்படவில்லை; நாங்கள் மனிதர்களாக வாழ முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்."

உ.பி. மாநிலத் தொழில் வளர்ச்சிக்கு உதவி

மத்திய ஆட்சியின் தாராளம்

இலட்சுமணபுரி, அக். 15—

உத்திரப் பிரதேச மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ 16,43,37,000 வரை செலவிட மத்திய அரசாங்கம் அனுமதி அளித்துள்ளதாக மாநிலத் தொழில் துறை அமைச்சர் குப்தா சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

கிராமங்களில் வீடு கட்டும் திட்டம்

சார்நிகர், அக். 14—

மாநிலத் திட்ட அதிகாரிகளின் மாநாடு, அபிவிருத்திப் பகுதிகளிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் 2 அல்லது 3 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து, கிராமங்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களைச் சோதனை செய்ய சிபாரிசு செய்துள்ளது.

வீடு கட்டும் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ 10 கோடியில் வீடு கட்டுபவர்களுக்குக் கடன் தர வேண்டும் என்றும் இந்த மாநாடு கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கைத் தமிழருக்குக் குடியுரிமை

மொத்தமாக மறுப்பதற்குப் பண்டாரநாயகா சர்க்கார் சதி

மனுக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு உள்நோக்கம் கற்பிக்கிறார் தூதுவர்

கல்கத்தா, அக். 11—

இலங்கையில் குடியேறியுள்ள இந்தியர்கள், இலங்கைக் குடிமக்களாவதற்காகச் செய்யும் மனுக்களை மொத்தமாக நிராகரிப்பதற்குக், கொத்தலாவலை சர்க்கார் காட்டிய அபத்தமான காரணங்களைவிட மோசமான காரணங்களை, பண்டாரநாயகா சர்க்கார் தேடிக் கண்டுபிடித்துக் கூறுவார்கள்போல் தெரிய வருகிறது.

இலங்கைத் தமிழர்களை 'நாடற்றவர்'களாக்குவதில், தீவிரமான நோக்குடையதாகப் பண்டாரநாயகா சர்க்கார் இருந்து வருகிறதென்றே தெரிகிறது.

கடந்த 10 வாரங்களில் மட்டும் சுமார் 2,37,000 மனுக்கள்—ஒவ்வொன்றும் ஒரு குடும்பத்திற்கானவை—குடியுரிமை கோரித் தரப்பட்டுள்ளன.

இந்தத் தகவலைத் தந்துள்ள இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவரான எட்வின் விஜய வர்த்தனே என்பார் தொடர்ந்து பேசியுள்ளவை, பண்டாரநாயகா சர்க்காரின் குடியுரிமை கோரும் தமிழர் பற்றிக் கொண்டுள்ள கருத்துக்கு விளக்கம் தருகிறது.

"ஏராளமான எண்ணிக்கையில் மனுக்கள் வந்திருந்தாலும், இந்த மக்கள் அனைவரும் இலங்கைக் குடிமக்களாக வேண்டுமென உண்மையான விருப்பம் கொண்டவர்கள் அல்ல"

என்று, அவர் பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

"இந்த மனுக்கள் தரப்பட்ட முறை, இவர்களுக்குப் பின்னால், திரை மறைவில் சிலர் வேலை செய்கிறார்கள் என்பதைக் கூறுகிறது" என்றும் அவர் கூறினாராம்!

★

சந்திப்பு!

"இந்தக் குடியுரிமை வழங்கும் தகராறுக்கு, அடுத்த ஜூன் திங்களில் இந்திய - இலங்கைப் பிரதமர்கள் சந்தித்த பின்பு ஒரு முடிவு ஏற்படக்கூடும்" என்றும் அவர் கூறினாராம்.

மனக் கோளாறினால் அவதியுறுவோர்

'கட்டுப்படுத்தப்பட்ட மயக்கம்' மூலம் தெளிவுறுவர்

அட்லாண்டிக் நகரம்—

மனக்கோளாறினாலும், உடல் அமைப்பினாலும் துயரப்படும் மக்களுக்கு எளிதாகச் சிகிச்சை அளிக்க உதவும் 'கட்டுப்படுத்தப்பட்ட மயக்கம்' என்ற ஒரு முறையை அமெரிக்கப் பல் வைத்திய சங்கத்தின் 97-வது ஆண்டு மாநாட்டுக்கு வந்த பிரதிநிதிகள் தெரிந்துகொண்டனர்.

கடந்த 10 ஆண்டுகளில் மனக் கோளாறு அல்லது உடல் அமைப்பினால் அவதியுறும் சுமார் 2,500 நபர்களுக்கு இம்முறையைப் பயன்படுத்தியதாக டாக்டர் ஒருவர் கூறினார்.

தம் திட்டத்தில் ஒரு சிறிய பொது மயக்கம், பல் வைத்திய நாற்காலியில் பிரத்தியேக மெத்தை, மயக்கமளிப்பவர், நர்ஸ் ஆகியோரின் உதவி அடங்கியுள்ளதாக அவர் குறிப்பிடுகிறார்.

10,000 கிராம மக்களின் ஆர்ப்பாட்டம்

பஞ்சத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உணவு கோரி நடவடிக்கை

நால்வர் உண்ணுவிரதம் மேற்கொண்டனர்

கூச் பிகார், அக். 14—

கடந்த வெள்ளியன்று சுமார் 10,000 கிராம மக்கள் திரண்டு, உள்ளூரிலுள்ள நிர்வாகத் தலைவரின் அலுவலகத்தின் முன் கூடி, 'பஞ்சத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் கொடு; உணவு கொடு; அரிசி மணங்கு 10–ரூபாய்க்குக் கிடைக்குமாறு செய்' என்றெல்லாம் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்,

இந்த ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து நான்கு பேர் உண்ணுவிரதம் துவக்கியதாகவும், இவர்களைப் போலீசார் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றுவிட்டதாகவும் தெரியவருகிறது.

இலக்கியங்களுக்கு நிதி உதவி

17,25,000 ஒதுக்கப்பட்டுள்ளது

நியூயார்க்—

இலக்கியங்களிலும் சமூக விஞ்ஞானங்களிலும் புலமைமிக்க நூல்களை வெளியிடுவதை ஆதரித்து அதற்கு ஊக்கமூட்ட ஐந்தாண்டுத் திட்டமொன்றை போர்டு தர்ம நிறுவனம் அறிவித்துள்ளது. இதற்காக 17,25,000 டாலர் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளது. (ஒரு டாலர் சுமார் ரூ. 4—12—0 ஆகும்.)

ஏறக்குறைய 30 கல்லூரிகள் அல்லது ஆதாயம் கருதாத நிறுவனங்கள் இந்த நன்கொடைகளைப் பெறத் தகுதியுள்ளவையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது உண்மையா?

"எதிரிகள் யுத்தத்தில் இறங்குவதை மறக்கச் செய்கிற—ஒரு யுத்தத்திற்கான வாய்ப்புகளை அற்றுப்போகச் செய்கிற 'பயங்கரமான ஆயுதம்' ஒன்றை ஆஸ்திரேலியா தயாரிக்க முனைந்துள்ளது,"

என்று, ஆஸ்திரேலிய மந்திரி ஹோவர்ட் பீல் என்பார் தெரிவித்

(4-ம் பக்கம் பார்க்க)

'வள்ளுவன் குறள் வையகமெல்லாம்பரவ வழி செய்தல் வேண்டும்'

'குறள் — வாழ்வுக்கு வழிகாட்டி, தமிழின் தனிச் சிறப்பு'

சி. பி. சிற்றரசு, கண்ணதாசன் சொற்பொழிவு

சென்னை, அக். 16—

சென்னை — மீர்சாகிப்பேட்டையில் அமைந்திருக்கும் வள்ளுவர் இலவச வாசகசாலையின் ஆருவது ஆண்டு விழா, 12-ந் தேதி மாலை 6 மணிக்கு, தோழர் இரங்கநாதன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

வாசகசாலையின் ஆண்டு அறிக்கையை, செயலாளர் பச்சையப்பன் வாசித்தார்.

கூட்டத்தில் மறைந்த மாவீரன் கே. வி. கே. சாமி அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து, கூடியிருந்த மக்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக இருக்க, ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் தோழர் இரங்கநாதன் குறிப்பிட்டார் :—

"நாட்டில் பலப்பல சங்கங்கள் இருப்பினும், குறள் நெறியைப் பரப்புவதற்கு உள்ள நிறுவனங்கள் மிகவும் குறைவு. மக்களிடம் குறளை மேலும் பரப்ப வேண்டிய நிலையுள்ளது. குறளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். எங்கும் குறள் நெறி பரவி நல்லதோர் சூழ்நிலையும், நல்லதோர் சமுதாயமும் அமைய வேண்டும்."

சி. பி. சிற்றரசு

அடுத்துத் தோழர் சி. பி. சிற்றரசு பேசியதாவது :—

"வள்ளுவர் பெயரால் இப்படிக் கழகங்களை அமைத்துக் குறளை மக்களிடையே பரவச் செய்வது பாராட்டத்தக்கது. அப்படி வள்ளுவர் என்ன சொல்லிவிட்டார் என்று சிலர் கேட்கலாம்; என்னையே ஒருவர் அப்படிக் கேட்டார் 'வள்ளுவர் என்ன சொல்லவில்லை?' என்று நான் கேட்டேன். நாம் எத்தனையோ பேர்களின் கருத்துக்களைப் படித்திருக்கிறோம்; மதத் தலைவர்கள் சொன்ன கருத்துக்களையும் படித்திருக்கிறோம்; அவையெல்லாம் எந்த அளவுக்கு மக்களுக்குப் பயன்படுகின்றன என்று பார்த்தால், குறள் படிக்கும்போது நமக்கு ஏற்படும் தெளிவு, இன்பம், உணர்ச்சி ஏற்படுவதில்லை. குறளில் உள்ள கருத்துக்கள் தெளிவாகவும், சுருக்கமாகவும் இருக்கிறது.

"அத்தகைய குறளுக்கு நாம் தரக்கூடிய மதிப்பு, வள்ளுவரின் கருத்துக்களை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதுதான். அதை விட்டு, குறளை யானை மீது வைத்து மாலை போட்டு ஊர்வலமாக எடுத்துச் சென்று தேங்காய் உடைப்பதில் அர்த்தமில்லை.

"குறளுக்குத் தெய்வத்தன்மை கற்பிக்க சிலர் முற்படுகிறார்கள்; அது தவறு. 'புராணத்தைப் படித்தால் மோட்சம் அடையலாம்; பாரதத்தைப் படித்தால் புண்ணியம் கிடைக்கும்'—என்பதுபோல, குறளைப் படித்தால் அப்படி ஒன்றும் கிடைக்காது. குறள் நல்லபடி நடப்பதற்கு ஓர் வழிகாட்டி. அதை, இன்னார்தான் படிக்க வேண்டும்—இந்த நாட்டவன்தான் படிக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. 'கம்ப இராமாயண'த்தைத் தமிழர்கள்தான்—பக்தர்கள்தான் படிப்பார்கள்; தமிழ் நாட்டில்தான் படிக்கின்றனர்

"வள்ளுவரின் குறள் அப்படிப்பட்டதல்ல. இதுவரை 32 மொழிகளிலே அது மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அது ஒரு உலக நூல்! இலண்டனில், பைபிலுக்கு பக்கத்திலே வைக்கப்பட்டுள்ள நூல் குறள்! வள்ளுவன் குறள் அரிய பொக்கிஷம்!

"வள்ளுவர் மட்டும் தமிழனாகப் பிறந்திராவிட்டால் அவருக்கு இந்த நாட்டில் அதிகப் புகழ் கிட்டியிருக்கும். அதுவும் அவர் ஆரியனாக இருந்திருந்தால் பலர் போற்றிப் பாராட்டியிருப்பார்கள். அவர் தமிழனாகப் பிறந்ததால்தான், இந்த நாட்டில், அவர் நினைவாக ஒரு விடுமுறை நாள் விடுவதற்குக்கூட அரசாங்கம் முன்வராத துர்ப்பாக்கிய நிலையிருக்கிறது.

"2,000 ஆண்டுகளுக்குமுன் உலகத்தில் பல மேதைகள் தோன்றியிருந்தனர். கிரேக்க நாட்டில் சாக்ரடீஸ், சீன நாட்டில் கன்பூசியஸ், இந்தியாவில் புத்தர், மகாவீரர் போன்ற அறிவாளிகள் வாழ்ந்த காலத்தில்தான் வள்ளுவரும் தமிழ் நாட்டில் வாழ்ந்தார். அவர் 2,000 ஆண்டுகளுக்கு முன்னரே, தெளிவாக வருங்காலத்தைக்கண்டறிந்து, தன்னுடைய கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். குறள் தமிழருக்கு ஒப்பற்ற நூல்—உலக நூல்—வாழ்வின் வழிகாட்டி ; அதைப் பட்டிதொட்டிகளில் எல்லாம் பரப்பிய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்ததாகும். அத்தகையக் குறள் நெறி மேலும் பரவட்டும்."

கண்ணதாசன்

அடுத்துப் பேசிய தோழர் கண்ணதாசன் அவர்கள் குறிப்பிட்டதாவது :—

"நாட்டில் எத்தனையோ சங்கங்கள் துவக்கப்பட்ட சில மாதங்களிலேயே முறிந்து போகின்றன ஆனால் இந்தத் திருவள்ளுவர் வாசகசாலை துவக்கப்பட்ட காலத்திலிருந்து நின்று நிலவி, நீடித்து நற்பணியாற்றிவருவது மிகவும் பாராட்டத்தக்கது. அதிலும் இம்மாதிரித் தொண்டு இலாபமில்லாதது என்பது தெரிந்தும், அவர்கள் இந்த நற்பணியில் ஈடுபட்டிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்கது இத்தகைய நல்ல தொண்டுள்ளம் படைத்தவர்கள் இம்மாதிரியான படிப்பகங்களை நாடெங்கும் ஏற்படுத்த வேண்டும்.

"பல ஆண்டுகளாக மறைத்து வைக்கப்பட்டிருந்த தமிழரின் ஒப்பற்ற நூலான திருக்குறளை, மீண்டும் மக்களிடையே உலவச்

(4-ம் பக்கம் பார்க்க)

சென்னை 31-வது வட்ட தி. மு. கழக 8-வது ஆண்டு விழா

ஏ. வி. பி. ஆசைத்தம்பி கலந்துகொண்டார்

சென்னை, அக். 11—

சென்னை 31-வது வட்டம் கோமளீசுவரன்பேட்டை தி. மு. கழக எட்டாம் ஆண்டு விழா இன்று மாலை 7 மணி அளவில் சந்திர பானு தெருவில் சிறப்புற நடைபெற்றது.

கூட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர் மேடைக்கு உயரே, 'உதயசூரியன்' ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தான்.

கூட்டத்திற்கு, சென்னை நகர சபை உறுப்பினரான தோழர் அ பொ. அரசு தலைமை தாங்கினார்.

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், இன்றைய அரசியல் நிலைகளை விளக்கியும், தி மு கழகம் தேர்தலில் ஈடுபடுவது குறித்தும், கழகத்தின் இலட்சியம் குறித்தும் சிறந்ததோர் உரை நிகழ்த்தினார்.

கூட்டத்தில் தோழர்கள் இளம்பரிதி, அந்தோனி, எப். மாறன் ஆகியோரும் பேசினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின், வட்டச் செயலாளர் இளஞ்சேரலாதன் நன்றி நவிலக் கூட்டம் இனிது முடிவுற்றது. (ச கி.)

'வள்ளுவர் ஒரு சிறந்த பொருளாதார நிபுணர்'

"திருவள்ளுவர் ஒரு தலைசிறந்த பொருளாதார நிபுணர். ஒரு நாட்டின் உயர்வும் தாழ்வும் அந்நாட்டின் உழவர்களைப் பொறுத்தே அமைகிறது. இதை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே உணர்ந்து, 'உழுவார் உலகத்திற்கு அச்சாணி' என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். நான் அமெரிக்கா சென்றிருந்தகாலை இக்கருத்தினை நன்குற உணர்ந்தேன். அங்கு ட்ரூமன் ஆட்சியில் இக்கருத்து முக்கிய இடம் பெற்றிருக்கிறது; உலகிலுள்ள ஏனைய நாடுகளும் இக்கருத்தினைப் பின்பற்றி ஆட்சி செலுத்துகின்றன. ஆனால் வள்ளுவர் பிறந்த நம் நாட்டில் இன்று உழவர் மிகவும் வருந்தத்தக்க நிலையில் வாழ்கின்றனர்; இந்நிலை மாற வேண்டும்."

என்று டாக்டர் பா. நடராசனார் அவர்கள் (நாகர்கோவில் இந்துக் கல்லூரி முதல்வர்) புதுக்கோட்டை திருக்குறள் கழகச் சார்பில் 7—10—56ல் நடைபெற்ற இலக்கியக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கூட்டத் துவக்கத்தில் இக்கழகச் சொற்பயிற்சி மன்றச் சார்பில் திரு வெ. தருமராசன் 'பாட்டுக் கலை' எனும் பொருள் பற்றியும், திரு சண்முகம் 'முத்தொள்ளாயிரம்' எனும் பொருள் பற்றியும் பேசினர். பேராசிரியர் சி. இலக்குவனார் அவர்கள் அவையினருக்கு டாக்டர் நடராசனாரை அறிமுகப்படுத்துங்கால், 'உண்மையான தமிழ்ப் பற்றும், தமிழ்ப் பண்பாடும் மிக்கப் பொருளாதார அறிஞர்' என்று குறிப்பிட்டார். (ந—கி.)

வெள்ளவேடு தி. மு. கழகத் துவக்க விழா

26—9—56 மாலை, தோழர் பி. சின்னசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க மூர்த்தி, டி. கே. போரூரான் ஆகியோர் சிறிது நேரம் பேசியபின், தோழர் சி பி சிற்றரசு திராவிடத்தின் இன்றைய சீர்கெட்ட நிலையையும், காங்கிரஸ் கட்சியின் தான்தோன்றித்தனமான நடத்தையையும் கண்டித்தும், வருகிற பொதுத் தேர்தலில் மக்கள் கடமை குறித்தும் பேசினார். இறுதியில் தோழர் சி வி. எம். அண்ணாமலை தோழர் கே. வி கே. சாமி மறைவு குறித்துப் பேசினார்

குன்னிப்பாளையம் தி. மு. கழகத் திறப்புவிழா

23—9—56 இரவு 7-மணிக்கு தோழர் வில்லவன் கோதை தலைமையில் மேற்படி கழகத் திறப்பு விழா நடைபெற்றது. தோழர் மறைமுதல்வன் கழகக் கொடியேற்றி வைத்துப் பேசினார். தோழர்கள் முத்துசாமி, இராசமாணிக்கம், இராமநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றியபின், தோழர் தில்லை-வில்லாளன் காங்கிரஸ் கட்சியின் அவலநிலை குறித்தும், ஐந்தாண்டுத் திட்ட அக்கிரமங்கள் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

உழவர்நகர்—சாலையூர் தி. மு. கழகம்

28—9—56 காலை 8 மணிக்கு கழக இல்லத்தில், தோழர் எல் ஆபேல் தலைமையில் தி. மு. கழக 8-வது ஆண்டு விழா நடைபெற்றது. தோழர்கள் முருகேசன், கோவிந்தசாமி ஆகியோர் கழகக் கொடியேற்றியும், அண்ணா படத்தைத் திறந்தும் வைத்தனர். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். அடுத்து 'போராட்டம்' எனும் நாடகம் ஒலி நாடகமாக நடிக்கப்பட்டது.

திருவண்ணாமலை வட்ட தி. மு. கழகம்

23—9—56 மாலை 5 மணிக்கு திருவண்ணாமலை தி. மு. கழக அலுவலகத்தில் தோழர் ப. உ. சண்முகம் தலைமையில் திருவண்ணாமலை வட்டக் கழக நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது:—செயலாளர்: ச கண்ணன் (கீழ் பெண்ணாத்தூர்); துணைச்செயலாளர்: என். இரத்தினம் (சு. வாளவெட்டி); பொருளாளர்: வேலு (நாடழகானந்தல்); விளம்பர உறுப்பினர்: மு. சீனுவாசன் (வேளானந்தல்).

கொரநாட்டுக்கருப்பூர் தி. மு. கழகம்

30—9—56-ல் நடைபெற்ற கழகக் கூட்டத்தில் நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :- செயலாளர் : கு. சுப்பையன்; துணைச்செயலாளர் : வீ. காசிதாசன் ; பொருளாளர் : இரா. கன்னையன்; மாவட்டப் பிரதிநிதி : அ நா ஞானசுந்தரம்.

இலங்கை தி. மு. க.

30—9—56 காலை, எண் 140, செம்பட்டா தெருவிலுள்ள இலங்கை தி மு. கழகக் கட்டிடத்தில், தோழர் இரா. அதிமணி தலைமையில் இலங்கை தி மு கழகச் செயற்குழு நடைபெற்றது. தோழர் கே. வி கே. சாமியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை தி. மு. கழக முதல் மாநாட்டை சிறப்பாக நடத்த நிதி திரட்டுவதற்கென, 28—10—56ல் மாநாட்டு உதவி நிதி இசை நிகழ்ச்சி ஒன்று நடத்துவதெனவும் அதற்கென தோழர் மூ. வே பெ. சாமி தலைமையில் குழு ஒன்று நியமித்தும், மற்றும் பல முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தளவாய்புரம் தி. மு. க.

30—9—56 இரவு 8-மணிக்கு கழக இல்லத்தில் தோழர் வா. பாலப்பன் தலைமையில் நடைபெற்ற செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், 21—9—56-ல் நடைபெற்றப் பொதுக்கூட்ட வரவு-செலவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

புளியங்குடி தி. மு. கழகம்

23—9—56 இரவு 9 மணிக்கு தோழர் சேதுராசு இல்லத்தில் தோழர் எஸ். தாமஸ் தலைமையில் நடைபெற்றக் கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள் எம். எஸ். ஆமீது, பரமசிவன், எம். நல்ராசு ஆகியோர் நீக்கப்பட்டு, தோழர்கள் சேதுராசு, சி இராமையா, எஸ். தாமஸ் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தேவகோட்டை தி. மு. க.

29—9—56 இரவு 10-மணிக்கு, தோழர் உ சீனிவாசன் தலைமையில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது; நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர் : குரு இதயமணி; துணைச்செயலாளர் : லெ இலட்சுமணன் ; பொருளாளர் : இராம க. சபாபதி. செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அண்ணா பொதுக்கூட்ட வரவு-செலவுகள் ஒப்புக்கொள்ளப்பட்டன.

எலப்பாக்கம் தி. மு. கழகம்

2—10—56-ல், தோழர் கா. சு. தனபாலன் தலைமையில் நிர்வாகக் குழுத் தேர்தல் நடைபெற்றது :— செயலாளர் : கு. கார்த்திகேயன் ; துணைச்செயலாளர் : ஆ குமாரசாமி; பொருளாளர் : க. கல்யாணசுந்தரம்; மாவட்டப் பிரதிநிதி : கா. சு. தனபாலன். மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டபின், நவம்பர் மாதத்தில் கழகப் பொதுக்கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது

ஆத்தூர் தி. மு. கழகம்

17—9—56 இரவு $7\frac{1}{2}$ மணிக்கு தோழர் ஏ காசிமுத்து இல்லத்தில் தோழர் பி. எம். செங்கசாமி தலைமையில் தோழர் எப். பி. சுப்பிரமணியம் எம். எல் ஏ. முன்னிலையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அனுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

வல்லம்படுகை தி. மு. க.

26—9—56 இரவு $9\frac{1}{2}$ மணிக்கு, தோழர் கோ. சோமு தலைமையில், கழக இல்லத்தில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 28—9—56-ல் நடைபெற்ற திராவிடநாடு பிரிவினை நாள் விழாக் கூட்ட வரவு-செலவுகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன.

வரகனேரி தி. மு. கழகம்

29—9—56 இரவு 9-மணி அளவில் தோழர் என். அருணாசலம் தலைமையில் புதிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது :—செயலாளர் : வி. கே. எம். சாமி ; துணைச்செயலாளர் : எம். எ. ஷரீப்தீன் ; பொருளாளர் : என். முருகேசன். மற்றும் செயற்குழு உறுப்பினர்கள்தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருப்பூண்டி தி. மு. கழகம்

7—10—56 இரவு 8 மணிக்கு, தோழர் இரா. விசயராகவன் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர் கூட்டத்தில் தோழர்கள் கு தென்னன், ஏ. இராசகோபால் மற்றும் பலர் பேசினர்.

ஆலந்தூர் தி. மு. க.

16—9—56 இரவு $9\frac{1}{2}$ மணிக்கு தோழர் எஸ். பாலன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

விருசாலூர் தி. மு. க.

17—9—56 இரவு 8 மணிக்கு கள்ளக்குறிச்சி வட்டம் விருசாலூர் தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் தோழர் மு. பாண்டியன் தலைமையில் நடைபெற்றது; நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: மா. பாண்டியன்; துணைச் செயலாளர்: ப. தங்கவேலன் ; பொருளாளர்: செ. கிருஷ்ணன்; மாவட்டப் பிரதிநிதி: ச.ரங்கசாமி, விளம்பர உறுப்பினர்கள் வி. உ. ச. மஞ்சமுத்து, கா. குழந்தைவேல். 21 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காஞ்சீபுரம் தி. மு. க.

25—9—56 இரவு 9 மணிக்கு தோழர் இரா. வெங்கடேசன் தலைமையில் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. சர்க்காரின் விலைத்தறிக் கொள்கையைக் கண்டித்தும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பஞ்சாப் தலைநகர் அமைப்புக்கு ரூ. 40 லட்சம்!

புதுடில்லி, அக். 12—

பஞ்சாப் மாநிலத்தின் தலைநகரை சாந்திகார் எனும் இடத்தில் அமைக்க பஞ்சாப் மாநில அரசாங்கத்திற்கு இந்திய அரசாங்கம் ரூ. 40 இலட்சம் உதவியளிக்க முன்வந்துள்ளதாகத் தெரிகிறது.

மதுரை மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக்கழகத் தேர்தல் ஆய்வுக் குழு

"மதுரை மாவட்டத்தில் கீழ்க் கண்ட விவரப்படி தேர்தல் ஆய்வுக் குழுக் கூட்டம் நடைபெறும்:—

"திண்டுக்கல், பழனி, ஒட்டன் சத்திரம், வேடசந்தூர், வட மதுரை, ஆத்தூர் தொகுதி களுக்கு 17—10—56 காலை 9-மணிக்கு திண்டுக்கல் பால் சாமி சத்திரத்திலும் ;

பெரியகுளம், தேனி, கம்பம், போடிநாயக்கனூர் தொகுதி களுக்கு 17—10—56 மாலை 6-மணிக்கு, பெரியகுளம் இராமானுசக் கூடம் வடகரை யிலும் ;

"மதுரை, மேலூர், நிலக் கோட்டை, உசிலம்பட்டி, திருமங்கலம்தொகுதிகளுக்கு 18-10-56 காலை 9-மணிக்கு, மதுரை முனிசிபல் வழிப்போக் கர் விடுதியிலும் நடைபெறும்.

"கிளைக்கழகச் செயலாளர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும், கழக ஆர்வங்கொண்ட பிரமுகர்களும் தவறாது வந்திருந்து தங்கள் கருத் துக்களைத் தெரிவிக்க வேண்டுகி றேன்,"

—என்று, மதுரை மாவட்டச் செய லாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் அறிவிக்கிறார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

17—10—56 இரவு 7 மணியள வில், சென்னை—ஞானி ஊ. பு அ. சௌந்திரபாண்டியனார் சின்னவுப் படிப்பக மனையில் ஓர் சொற் பயிற்சிக்கூட்டம் தோழர் பால குமாரன் தலைமையில் நடை பெறும்; 'சட்டசபையில் நாம்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

75 தமிழரசுக் கழகத்தவர் கைது

தமிழகத்தில் வடக்கெல்லை மீட்புக் கிளர்ச்சி

சென்னை, அக். 15—

தமிழ் நாடு—ஆந்திர மாநிலங்களிடையே உள்ள எல்லைத் தகராறுக்குத் தீர்வுகாண எல்லைக் குழு நியமிக்கக் கோரி தமிழ் நாடெங்கும் தமிழரசுக் கழகத்தவர் மறியல், இரயில் நிறுத்தம் போன்ற கிளர்ச்சிகளைத் துவங்கியுள்ளனர்.

அந்தக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டதற்காக மாநிலமெங்கணுமாக 75 தொண்டர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

இந்தக் கிளர்ச்சி, எல்லைக்குழு நியமிக்கப்படும் வரையில் தினமும் தொடர்ந்து நடைபெறும் என்று முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

இப்போது, 'சர்க்கார் இக் கிளர்ச்சி பற்றி என்ன கருதுகிறது என்பதைத் தெரிந்துகொண்ட பிறகு அடுத்த நடவடிக்கை பற்றி யோசிக்கப்படும்,' என்பதாகத் தமிழ ரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. அறிவித்திருக்கிறார்.

பத்திரிகையாளரிடம் பேசிய அவர், 16-ந் தேதி பகல் நிலைமை கள் தனக்குத் தெரியவரும் என் றும், அன்று மாலையோ மறுநாள் காலையோ, செயற்குழுவைக் கூட்டி மேலால் நடக்கவேண்டியவை குறித்து யோசிக்கப்படும் என்றும் கூறியிருக்கிறார்.

இன்றும் மறியல்

சென்னை, அக் 16—

இன்று இரண்டாம் நாளாக, தலைமைத் தபால் அலுவலகத்தின் முன்பு மறியல் நடைபெறுகிறது எனத் தெரியவருகிறது.

திருமணங்கள்

18—10—56 காலை 9 மணிக்கு எம். ஜி. ஆர். நாடக மன்றத் தோழர் எஸ். வி. கே. முத்து—தோழியர் ஸ்டெல்லா திருமணம், சென்னை—நுங்கம்பாக்கம் ஜோசி யர் தெருவிலுள்ள திருமண மன் றத்தில் அண்ணு அவர்கள் தலை மையில் நடைபெறும். தோழர்கள் எம். ஜி. சக்கரபாணி, எம். ஜி. இராமச்சந்திரன், நாரண-துரைக் கண்ணன், என். எஸ். நாராயணன், டி. என். இராசப்பா, எம். கே. முஸ்தபா ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

18—10—56 காலை 8 மணிக்கு, புதுவைக்கடுத்த சாலையூர் (உழவர் கரை) தோழர் மு. பழனிராசு—தோழியர் இராஜாமணி திருமணம் தோழர் ச. சிவப்பிரகாசம் தலை மையில் மணமகன் இல்லத்தில் நடைபெறும்; தோழர்கள் அ. பொன்னம்பலனார், வாணி தாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

வள்ளுவன் குறள் வையகமெல்...

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

செய்த பெருமை— எழுத்துமூலம் ஏடுகளிலும் புத்தகங்களிலும், பேச்சின்மூலம் மேடைகளிலும் மக்களுக்குக் குறளின் சிறப்பையும் அதில் அடங்கியுள்ள அரிய கருத் துக்களையும் உணர்த்திய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத் தைச் சேரும்.

"திருக்குறள் தமிழர்களின் பண்பாடுடன் ஒட்டிப் பழகி அனு பவித்து எழுதப்பட்டதென்பதை விளக்கியவர்கள் நாம்தான். 2,000 ஆண்டுகளுக்குமுன் தமிழர்களின் நாகரீகம் கலாச்சாரம் எப்படி யிருந்தது என்பதைத் திருக்குறள் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டப் பயன்படுகிறது.

"இன்று நாகரீகம் மிகுந்த நாடாக விளங்கும் அமெ ரிக்கா கருப்பாக இருந்த காலத்தில், பண்டித நேரு வின் மக்கள் ஆடையில்லா விலங்குகளாக வாழ்ந்த காலத்தில்—அதாவது 2,000 ஆண்டுகளுக்கு முன்னரே திருக்குறள் தமிழ் மொழிக்கு நல்ல விளக்கமும் ஆட்சிக்கு முறையும் வகுத்துத் தந்துள் ளது. அதனால்தான் குற ளைப் பாராட்டுகிறோம், பெரு மையோடு பேசுகிறோம். தமிழ் வாழ்ந்த வகை—வாழ வேண்டியவகை இரண்டை யும் குறள் வகுத்துள்ளது. குறள், அன்றாட வாழ்க் கைக்குப் பயன்படும் நூல்.

"வடவர் மொழியான சமஸ்கிரு தத்திற்கு நம்முடைய தமிழைப் பலர் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள். இரண்டு மொழிகளும் எப்போது தோன்றின என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்பதிலே வேண்டுமானால் ஒற்றுமையிருக்க லாம்

"வடவர் மொழி கோயிலிலே புகுத்தப்பட்டும், தேவ மொழி என்று புகழப்பட்டும், அரசுகளின் ஆதரவு பெற்றிருந்தும், இன்று அது 'சவமொழி'யாகக் காட்சி யளிக்கிறது. தமிழ்—இத்தனைக் கும் இடையே வளர்ந்து உயிர் வாழும் ஓர் வளமான மொழியாகத் திகழ்கிறது

"தாக்குதல் இல்லாது செத்த மொழி சமஸ்கிருதம்.

"தாக்குதலைத் தாங்கியும் உயிர் வாழும் மொழி தமிழ்!

"மற்ற மொழிகளுக்கு இல்லாத சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு.

"குறள் தேவையில்லை என்று யாருமே கூறவில்லை; உரை தருவ திலே வேண்டுமானால் கருத்து வேறுபாடு கூறுவார்கள். ஆனால், குறள் தேவையில்லை என்று யாரும் குறிப்பிடமாட்டார்கள்—குறிப்பிட் டதும் இல்லை. குறள், உலக மக் களுக்குத் தேவையான விஷயங் களை விரிவாகக்கொண்டு பயன் படும் முறையில் அமைந்துள்ளது. அதனால்தான் நாம் குறளை எடுத் துச் சொல்லி, மக்களைத் திருத்தி மாற்றி அமைக்க முயற்சி செய்து வந்துள்ளோம்.

"நாடு எப்படியிருக்கவேண்டும் என்று 2,000 ஆண்டுகளுக்கு முன் னரே வள்ளுவர் குறிப்பிட்டார்.

"பசி, பிணி, பகை இல்லாததே நாடு—என்றார்.

"இன்று காங்கிரஸ் ஆட்சி புரியும் இந்த நாடு, 'காடா—நாடா' என்று பாருங்கள்; சுதந்திரம் கிடைத்து ஒன்பது ஆண்டுகள் ஆகிறது. நாட்டில் பிச்சைக் காரர்களா இல்லை? சுதந்திரம் கிடைத்தபின் பிச்சைக்காரர்கள் இல்லாத நாடாக ஆகியிருக்க வேண்டாமா? அதனால்தான் வள்ளுவர், ஒரு நாட்டின் ஆட்சிப் பொறுப்பு எத்தகைய வர்கள் கையில் ஒப்படைக்கப் படவேண்டும் என்று 2,000 ஆண்டுகளுக்கு முன்னரே குறிப் பிட்டார்.

"செயல் தெரிந்து செய்பவன் —படித்துப் புரிந்துகொள் ளக்கூடியவன்—சொந்த புத் தியும் அறிவும் உடையவன்; —சுயமாகச் செயலாற்றக் கூடியவன் இத்தகைய அரிய பண்புகளை உடையவனிடம் ஆட்சியிருக்கவேண்டும் என் றார். எந்தக் காரியத்தை அவனிடம் ஒப்படைத்தால் ஒழுங்காகச் செய்வானோ, அவனிடம் அந்தக் காரி யத்தை ஒப்படைக்க வேண் டும் என்றார் வள்ளுவர்.

" அத்தகைய நிலை இந்தக் காங் கிரஸ் ஆளும் 'சுடுகாட்டில்' ஏற்பட வேண்டுமானால், அண் ணாவும் அவரது தம்பிமார் களும் ஆட்சிப் பீடத்திற்கு வந்தால்தான்—நாம் விரும்பும் திராவிட நாடு தனியே பிரிந் தால்தான் முடியும்."

தூத்துக்குடி கொலைவழக்கு

இருவர் ஒப்புதல் வாக்குமூலம்

எட்டயபுரம், அக். 14—

தூத்துக்குடித் தோழர் வே. வி. கே. சாமி படுகொலை செய்யப்பட் டதை ஒட்டி கைது செய்யப்பட் டோரில் ஒருவரான சித்திரவேலுத் தேவர், கோவில்பட்டி சப்-மாஜிஸ் திரேட் முன் கொண்டுவரப்பட் டிருக்கிறார். அப்போது அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் தந்ததாகத் தெரிய வருகிறது.

டேவிஸ்புரம் கிராம முன்சீப் ஆறுமுகம் (பிள்ளை) கொலை செய் யப்பட்டதை ஒட்டி கைது செய்யப் பட்ட ஜேசுராஜா என்பவரும் அதே கோவில்பட்டி மாஜிஸ்தி ரேட் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் தந்திருக்கிறார்.

—'இந்து' : 16-10-56

நன்றி அறிவிப்பு

"மாவட்டச் சுற்றுப் பயணத் தின்போது எங்களுடன் ஒத் துழைத்து, நல் வரவேற்பும் கொடுத்த கிளைக் கழகத் தோழர் கள் அனைவருக்கும் எங்கள் நன் றியைத் தெரிவித்துக் கொள் கிறோம். சுற்றுப் பயணத்தில் உடனிருந்து பணியாற்றிய தோழர்கள் கோதண்டம், சிவக் குமாரன், பாலு, மற்ற நண்பர் களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். கிளைக் கழகங்கள் நல்ல முறையில் பணியாற்று வது கண்டு பாராட்டுவதுடன், இன்னும் அவை வலிவுடனும் பொலிவுடனும் பணியாற்றச் செய்யுமாறு கிளைக் கழகத் தோழர்களையும் கேட்டுக்கொள் கிறோம்,"

என்று செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் தோழர் நி. நா. சம் பந்தம், துணைச்செயலாளர் ஜே ஏ. கோப் அறிவிக்கின்றனர்.

சூயஸ்: ஐ. நா. சபை முடிவு குறித்து எகிப்து

கெய்ரோ, அக். 5—

சூயஸ் கால்வாயை சர்வதேச நிர்வாகத்தின்கீழ் விடமுடியாது என்ற தனது கொள்கையை வற் புறுத்தி எகிப்து சர்க்கார் ஐ. நா. பாதுகாப்பு சபை பேச்சுவார்த்தை களுக்கான ஆறு அடிப்படைக் கொள்கைகள் குறித்துத் தனது கருத்தை அறிவித்துள்ளது.

அரசியலோடு இந்தக் கால்வாய்ப் போக்குவரத்தை இணைக்கக் கூடாது என்ற கொள்கையை எகிப்து ஏற்றிருப்பதாகத் தெரிய வருகிறது.

சர்வதேச நிர்வாகத்தின்கீழ் சூயஸ் கால்வாயைக் கொண்டு வருவது, கூட்டுக் காலனி ஆதிக் கத்திற்குச் சமமாகும் என்பதால் அதனை எகிப்து ஏற்கமுடியாது', என்று திட்டமாக எகிப்திய வெளி விவகார மந்திரி தெரிவித்திருக் கிறாராம்.

புகை பிடிப்பதைத் தடை செய்யப் பிரச்சாரம்!

சென்னை, அக் 15—

சென்னையின் சுற்றுப்புற ஊர் களுக்குச் செல்லும் மின்சார இரயி லிலும், மற்ற சாதாரண இரயி லிலும் கூட்டம் அதிகமாக இருப்ப தால், புகை பிடிப்பதைத் தடை செய்வதற்குப் பிரச்சாரம் செய்யப் போவதாகத் தெரிய வருகிறது.

இது உண்மையா?

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

திருக்கிறார்.

" இந்த ஆயுதம், நெடுந்தொலைவு தானாகவே வழியறிந்து செல்லக் கூடியது! இந்த ஆயுதம் மூன்றாம் உலக யுத்தத்திற்கான சாத்தியக் கூறுகளை அறவே ஒழித்து விடும்! எதிரிகள், தங்கள் தக ராறுகளைத் தீர்த்துக்கொள்ள, யுத்தத்தைத் தவிர்த்த வேறு வழிகளையே நாட வேண்டி வரும்,"

என்றும் அவர் கூறியிருக்கிறார்.

டில்லிதரும்கடன்

புதுடில்லி, அக். 15—

காஷ்மீரின் அபிவிருத்தித் திட் டங்களுக்காக டில்லி சர்க்கார், காஷ்மீர் சர்க்காருக்கு ரூ. 125 கோடி கடன்தர முடிவு செய் திருப்பதாகத் தெரியவருகிறது.

ரூ. 500 வெகுமதியாம்!

தென்னிந்தியாவிலிருந்து கள் ளத்தனமாகக் குடியேறுபவர்களைக் காட்டிக்கொடுப்பவர்களுக்கு ரூ.500 வெகுமதியளிப்பதற்கு இலங்கை அரசாங்கம் முன்வந்திருப்பதாக 'டைம்ஸ் ஆப் சிலோன்' பத்திரிகை கூறுகிறது.

கழகக் கூட்டம்

★

புதுவை—சாலையூர் :

(உழவர்கரை)

18—10—56 மாலை 6 மணிக்கு

தலைவர் : பெ. பெனூர்

பேசுவோர் :

அ. பொன்னம்பலனார்

சு. பெருமாள்

ச. சிவப்பிரகாசம்

*****-********-***************************************

தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப்பயணம்

★

அக்.	ஊர்	நேரம்		தங்கும் இடங்கள்
17 :	திண்டுக்கல்	.... காலை 9	,,	.... பால்சாமி சத்திரம்
,,	பெரியகுளம்	.... மாலை 6	,,	.... இராமானுசக் கூடம் வடகரை
18 :	மதுரை	.... காலை 9	,,	.... முனிசிபல் வழிப்போக்கர் விடுதி
,,	விருதுநகர்	.... மாலை 6	,,	.... முசாபரி பங்களா
19 :	திருநெல்வேலி	.... காலை 9	,,	.... பாளையங்கோட்டை, திருச்செந்தூர் ரோடு முருகன் ஐஸ் பாக்டரி மாடி (வைரம் பிராஞ்சு போலீஸ் ஸ்டேஷன் அருகில்)
,,	நாகர்கோவில்	.... மாலை 6	,,	.... நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக அலுவலகம்
20 :	திருவனந்தபுரம்	.... காலை 9	,,	....; தி.மு.க., ஆண்டாள் பில்டிங்ஸ், தம்பானூர்
21 :	காரைக்குடி	.... மாலை 6	,,	.... 'இயூமன் காட்டேஜ்'—Human Cottage 5. முத்துப்பட்டிணம் 4-வது தெரு
22 :	பட்டுக்கோட்டை	.... காலை 9	,,	.... காசாங்குளம் வடகரை சத்திரம் ஓய்வுவிடுதி
,,	தஞ்சை	பிற்பகல் 3	,,	.... கீழவாசல். கொண்டிராசபாளையத் தண்ணீர்ப் பந்தல் கட்டிடம்
,,	மாயவரம்	.... மாலை 6	,,	.... முனிசிபல் ஓய்வு விடுதி (மாயூரம் சந்திப்பு அருகில்)
23 :	கடலூர் N. T.	.... காலை 9	,,	.... முசாபரி பங்களா

23—10—56 அன்று இரவு சென்னை வந்து சேருவார்கள்

'அறிவகம்' சென்னை 23—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

*********************-*********************-**********

திராவிட முன்னேற்றக் கழகத்துக் காக தோழர் இரா. நெடுஞ் செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறு கிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ் செழியன் எம். ஏ.